DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.303/2025

PW - 5

| | | |
|---|---|---|
| Name | : | மனோகரன் (Lw - 5) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 24.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2025ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 23.12.2024ம் தேதி காலை 9.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது எனது தலைமையில் தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.ரமேஷ் என்பவரும் மதுவிலக்கு குற்றதடுப்பு அலுவலாக எருப்பட்டி காவல் நிலைய சரக பகுதியில் கண்காணித்து சென்ற போது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் எருப்பட்டி காவல் நிலைய சரகம், பவித்திரம் சுடுகாடு செல்லும் வழியில் குப்பை கிடங்கு 11.30 மணிக்கு கண்காணித்து சென்ற போது சுமார் 60 வயது மதிக்க தக்க ஒரு நபர் கையில் பிராந்தி பாட்டிலுடன் நின்றிருந்த நபரை போலீஸ் பார்டியுடன் சுற்றிவளைத்து பிடித்த போது அவர் தனது பெயர் பிச்சைமுத்து வயது 63 க.பெ.இராமசாமி 4/5 கிழக்கு தெரு, பவித்தரம் அஞ்சல், சேந்தமங்கலம் வட்டம் நாமக்கல் மாவட்டம் என்றும் அவர் அதிக பணம் சம்பாதிக்க வேண்டி அரசு அனுமதியின்றி குறைந்த விலையில் உள்ள பிராந்தி

வாங்கி கள்ளத்தனமாக அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார் அவரை அங்கேய கைதுக்கான காரணம் கூறி 11.45 மணிக்கு கைது செய்தேன்.

பின்னர் அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வரததால் உடன் இருந்த தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.ரமேஷ் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலோ, ஆசை வார்தையோ, வற்புறுத்தலோ இல்லாமல் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 12.00 மணிக்கு பதிவு செய்தேன்.

பின்னர் எதிரி வெள்ளை நிற நைலான் சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுக்கொண்ட Black Brandy - 26 பாட்டில்களை ஆஜர் செய்ததை 13.00மணிக்கு தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் ாதிரு.ரமேஷ் முன்னிலையில் கைப்பற்றினேன். **(**கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 14.30 மணிக்கு நிலையம் வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண்.587/2024 U.s.4(1)(C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்டுகிறது**.)** பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன். பின்பு கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் உதவி ஆணையர் (கலால்) அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

பின்னர் அன்றைய தினமே மாலை 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பார்த்திபன், கந்தையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.8** ஆகவும்**,** மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் சாட்சிகள் தலைமை காவலர் திரு.மோகன்குமார், தலைமை காவலர் திரு.ரமேஷ், பார்த்திபன் மற்றும் கந்தையா ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. ரகசிய தகவல் கிடைத்தது. எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் ரசீது ஏதும் இல்லை ஆனால் அந்த ஊழியரை விசாரித்தோம். மேற்படி ஊழியரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எந்தஒரு புகைப்படமோ வீடியோ ஆதாரமோ நீதிமன்றத்தல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது எதிரி போலிசாரின் பொறுப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**